செய்தி வெளியீடு எண் : 115 நாள் : 13-02-2019

பதிவுத்துறைத்தலைவர்அலுவலகம்,

சென்னை –28.

**சுற்றறிக்கை**

ந.க.எண்.6128/சி1/2019 நாள். 13.02.2019.

பொருள்: பதிவுத்துறை – முத்திரைத்தீர்வை, பதிவுக்கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை செலுத்துதல் – செலுத்தும் முறை – கடன் அட்டை, பற்று அட்டையை பயன்படுத்தி PoSமூலம் செலுத்தும் வசதி 18.2.2019 முதல் ஏற்படுத்துதல் – கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து தெளிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. பதிவுத்துறைத்தலைவர் க.எண்.44117/இ1/09 நாள் 8.9.2009.
2. பதிவுத்துறைத்தலைவர் க.எண்.5642/சிஎஸ்1/12 நாள் 7.1.2015.
3. அரசு கடிதம், வணிகவரி மற்றும் பதிவுத்(J1)துறை எண்.153 நாள் 5.12.2018.

******

பார்வை 1ல் காணும் பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கையின் மூலம்ரூ.1000/–க்கு மேற்பட்ட முத்திரைத்தீர்வை, பதிவுக்கட்டணம் மற்றும் இதர அரசு கட்டணங்கள் ஆகியன, வங்கி வரைவோலை மூலம் வசூலிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு அந்நடைமுறை; பதிவு அலுவலரால் பின்பற்றப்பட்டு வருகிறது.

பார்வை 2–ல் காணும் பதிவுத்துறைத்தலைவர் கடிதம் மூலம் இணையவழி மற்றும் நேரடியாக வங்கிமூலம் பதிவுத்துறைக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை செலுத்தும் வசதி; கனரா வங்கி, பரோடா வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி, பஞ்சாப்நேஷனல் வங்கி ஆகிய 5 வங்கிகளின் மூலம் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

12.2.2018 அன்று ஸ்டார் 2.0 மென்பொருள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட போது மேலும், அலகாபாத் வங்கி, ஐடிபிஐ வங்கி, சின்டிகேட் வங்கி, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, யூனியன் வங்கி, விஜயா வங்கி ஆகிய வங்கிகளுக்கும் விரிவுபடுத்தபட்டது.

பார்வை 3ல் காணும் அரசு கடிதத்தில் முத்திரைத்தீர்வை, பதிவுக்கட்டணம் மற்றும் இதர கட்டணங்களைரூ.1000/- வரை ரொக்கமாக வசூலிக்கலாம் என்றும் ரூ.5000/- வரை வங்கி வரை வோலையாக வசூலிக்கலாம் என்றும் இணையவழி மற்றும் நேரடியாக வங்கி மூலம் செலுத்திடும் முறையில் கட்டணங்களை எந்த வரம்பின்றி வசூலிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து வங்கிகள் மூலமும் மற்றும் இணையவழி, கடன் அட்டை, பற்று அட்டை, UPI மூலம் முத்திரைத்தீர்வை, பதிவுக்கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை செலுத்தும் வசதி; பாரத ஸ்டேட் வங்கியை ஒருங்கிணைப்பாளராக தேர்வு செய்து அதன் மூலம் இவ்வசதி ஏற்படுத்தப்பட்டு 10.12.2018 அன்று இவ்வசதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

தற்போது அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் ரூ.1000/- வரையிலான கட்டணங்களை வசூலிக்க பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் PoS இயந்திரம் வழங்க உத்தேசிக்கப்பட்டு அதற்கான அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இம்முறை 18.2.2019 முதல் அறிமுகப்படுத்தப்படுகிறது. **18.2.2019 முதல் ரூ.1000/- வரையிலான முத்திரைத்தீர்வை, பதிவுக்கட்டணம் மற்றும் இதரகட்டணங்களை PoS இயந்திரம் வழிமட்டுமே வசூலிக்க வேண்டும் எனவும் ரொக்கமாக எந்த கட்டணத்தையும் வசூலிக்கக் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.**

இவ்வாறு PoS இயந்திரம் மூலம் தொகை வசூலிக்கப்பட்டதும் இரண்டு ரசீதுகள் அதிலிருந்து உருவாகும். ஒரு ரசீதை சம்பந்தப்பட்ட நபருக்கு வழங்க வேண்டும். மற்றொரு ரசீதை அலுவலகத்தில் பராமரிக்க வேண்டும். வசூலிக்கப்பட்டதொகையை ஸ்டார் 2.0 மென்பொருளில் PoS இயந்திரம் மூலம் பெறப்பட்ட ரசீதில் உள்ள RRN எண்ணுடன் உட்புகுத்தி ரசீது தயாரிக்க வேண்டும். மேற்படி PoS இயந்திரம் மூலம் வசூலிக்கப்பட்ட தொகை; இணையவழி செலுத்தப்படும் தொகை போல பாரத ஸ்டேட் வங்கியின் ஒருமையக் கணக்கில் (Bank Nodal Account) வரவு வைக்கப்பட்டு அடுத்த நாள் இந்திய ரிசர்வ் வங்கியில் உரிய தலைப்பில் இருசால் செய்யப்படும். அன்றைய தினம் முடிந்தவுடன் PoS இயந்திரத்திலுள்ள 8ம் எண் பட்டனை அழுத்தி தொடர்ந்து பச்சை நிறபட்டனை அழுத்த வேண்டும். இவ்வாறு அழுத்தியவுடன் அன்றைய தினத்தில் இந்த இயந்திரம் மூலம் வசூலிக்கப்பட்ட தொகைகளின் விவரம் அச்சுபிரதியாக வரும். இதனை அன்றைய தினம் எடுத்து தனித்தனி ரசீதுடன் சரிபார்த்து அதனுடன் சேர்த்து பராமரிக்க வேண்டும். PoS இயந்திரத்தை இயக்குவது

குறித்த வழிகாட்டி; இந்த சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனைப்படித்து சரிவர பயன்படுத்த அனைத்து பதிவு அலுவலர்களும் கோரப்படுகின்றனர்.

ஒவ்வொரு கணக்கிலும் PoS இயந்திரம் மூலம் வசூலிக்கப்பட்ட தொகை தனியாக காட்டப்படும். சார்பதிவாளர் தொகையை PoS இயந்திரம் மூலம் வசூலிக்கும் போது எக்காரணத்தைக் கொண்டும் இரண்டாவது முறை அதே தொகையை வசூலிக்கக்கூடாது எனத் தெரிவிக்கப்படுகிறது. தொகை செலுத்திய பின் தவறாக செலுத்தியிருந்தாலோ அல்லது ஏதாவது ஒருகாரணத்திற்காக சேவையினை பெறாமல் தொகையினை திரும்ப பெற விரும்பினால், பார்வை 2ல் காணும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட நடை முறையையே பின்பற்ற வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு தவறாக செலுத்தப்பட்ட தொகையை வேறு ஆவணத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இம்முறை மூலம் பணம் செலுத்தி ஒரு வருடத்திற்குள் சேவையினை பெறாவிடில் செலுத்திய தொகை காலாவதி ஆகிவிடும் எனவும் அதனை திரும்பப் பெற இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. PoS இயந்திரத்திற்கு தேவையான கணினி நுகர் பொருட்கள், PoS இயந்திரம் இயங்காமை போன்றவை தொடர்பாக இணைப்பில் கண்டுள்ள நிறுவனத்தின் நபர்களை தொடர்பு கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை; சரியாக செயல்படுத்தப்படுவதை கண்காணிக்க; மாவட்டப்பதிவாளர்கள் மற்றும் துணைப் பதிவுத்துறைத்தலைவர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

ஒம்/–13.02.2019.

பதிவுத்துறைத்தலைவர்

/ஆணைப்படி/

கூடுதல் பதிவுத்துறைத்தலைவர் 13.2

(முத்திரை மற்றும் பதிவு)

13.2.2019

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9